**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம்**
சார்பு நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை
முன்னிலை: திரு.எஸ். விஜய் அழகிரி, பி.காம்., பி.எல்.,
சார்பு நீதிபதி, தேன்கனிக்கோட்டை
2026–ஆம் ஆண்டு ஏப்ரல் 02–ஆம் நாள் வியாழன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057– விசுவாவசு வருடம் – பங்குனி திங்கள் 19 ம் நாள்)

**மோ.வா.வி.இ.அ.ம.எண். 56/2023**
**CNR No. TNKI160006922023**

A. சதிஷ் ... மனுதாரர்

/எதிராக/

1. T. துரை ராஜ்
2. M/S. UNITED INDIA INSURANCE கம்பெனி லிமிடெட்.

...எதிர்மனுதாரார்கள்

இம்மனுவானது முதன் முதலில் மோட்டார் வாகன விபத்து வழக்கு தீர்ப்பாயம், ஓசூர் (கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஓசூர்) நீதிமன்றத்தில் 06.07.2022 அன்று தாக்கல் செய்யப்பட்டு அங்கு MCOP எண் 273/2022 என 06.12.2022 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு பின்னர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி ROC. No. 833/2023, dt. 27.01.2023 ன்படி ஓசூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அங்கு 22.02.2023 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து பின்பு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், கிருஷ்ணகிரி ROC. No. 11777/SHR 2023 ல் 10.11.2023 தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் MCOP No. 56/2023 என 22.12.2023 கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 02.04.2026 ம் தேதி இன்று இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. K. செல்வி, M.L., MHRM., DLL., அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகததால் அவரைபொறுத்து

ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டும், 2வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. S. தமிழ்நாதன், M.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

<u>உத்தரவு</u>

மனுதாரர் தனக்கு சாலை விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு ரூ. 15,00,000/– இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166 ன் கீழ் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. மனுவின் சுருக்கம் :</u>**

| | |
|---|---|
| மனுதாரரின் பெயர், வயது, தொழில் மற்றும் வருமானம் | A. சதிஷ், த/பெ. அன்பழகன், 20 வயது, சூப்பர்வைசர் TATA கம்பெணி, மாதம் ரூ. 25,000/– |
| விபத்து சம்பவ இடம், நாள் மற்றும் நேரம் | கடந்த 08.01.2022 அன்று மாலை 03.30 மணியளவில் ராயக்கோட்டை – கெலமங்கலம், தின்னூர் ELPS பள்ளி அருகில் |
| குற்ற வழக்கு விபரம் | ராயக்கோட்டை PS, Cr. No, 08/2022, U/S. 279, 337 IPC |
| காயத்தின் விபரம் | மனுதாரருக்கு விபத்தினால் pain to his left foot and injuries all over the body போன்ற காயங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார். |
| சிகிச்சை விபரங்கள் | மனுதாரர் விபத்திற்கு உட்பட்டவுடன் 08.01.2022 முதல் 12.01.2022 மற்றும் 25.01.2022 ஆகிய தேதிகளில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையிலும், கிருஷ்ணகிரி நாதன் ஸ்பெஸாலிட்டி மருத்துவமனையிலும் பிறகு கிருஷ்ணகிரி ராம்ஸ் சென்டர் கேன்சர் |

| | |
|---|---|
| | மருத்துவமனையிலும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். |
| சம்பவ விபரங்கள் | மனுதாரர் கடந்த 08.01.2022 அன்று வழக்கம்போல வேலைக்கு TN 29 CY 9375 பதிவெண் கொண்ட இரு சக்கரவாகனத்தில் தனது நண்பர் சுதாகர் என்பவருடன் சென்று கொண்டிருந்தார் என்றும், மாலை 03.30 மணியளவில் ராயக்கோட்டை – கெலமங்கலம், தின்னூர் ELPS பள்ளி அருகில் சென்று கொண்டிருந்தபோது TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநர் அதிவேகமாக வந்து மனுதாரர் சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி விபத்திற்கு 1 வது எதிர்மனுதாரரும், 2 வது எதிர்மனுதாரரால் காப்பீடு செய்யப்பட்ட TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநர் அதிவோகமாகவும், அலட்சியமாகவும், சாலை விதிகளைப் பொருட்படுத்தாமலும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. |
| மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு தொகை | ரூ. 15,00,000/– |

3. 1 வது எதிர்மனுதாரரை அழைத்தும் நீதிமன்றத்தால் ஆஜராகததால் அவரை பொறுத்து ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளது.

<u>5. 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றும், இந்த எதிர்மனுதாரரால் எதிர்உரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற

சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் எனவும், மனுதாரரின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் விபத்து நடைபெறவில்லை என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை சாட்சியம் மற்றும் ஆவண ஆதாரங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்றும், விபத்தானது TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சாலை விதிகளை பின்பற்றாமலும் கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறுவது தவறு என்றும், மனுதாரரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்திற்கு மனுதாரர் தான் காரணம் என்றும், 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமத்தில் பேட்ஜ் இல்லை என்றும், அதனால் பாலிசி விதிமீறல் உள்ளது என்றும், மேலும், மனுதாரர் இருசக்கர வாகனத்தில் மனுதாரர் சதிஷ் ஓட்ட பின்னால் சுதாகர் மற்றும் மற்றொரு நபரை உட்கார வைத்து 3 நபர்கள் சென்றிருப்பதால் மனுதாரர் தான் விபத்திற்கு காரணம் என்றும், எனவே இந்த எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், மனுதாரரின் தொழில், வயது, வருமானம், காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விபரங்கள் ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் மனுதாரர் பல்வேறு தரப்பின் கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும், எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியவை.**

1. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது ?
2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்பானவர்கள் யார் ?
3. மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீடு தொகை எவ்வளவு ?

**6. பிரச்சனை – 1**

i) இருதரப்பிலும் கற்றறிந்த வழக்கறிஞர்கள் அவரவர்கள் வழக்குரையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் வாதிட்டார்கள். மனுதாரர் தரப்பில்

மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபப்பட்டுள்ளன. மனுதாரர் தரப்பில் மனுதாரரின் மருத்துவ பில்கள் 2 வது எதிர்மனுதாரர் சம்மதத்தின்பேரில் ம.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யபப்பட்டுள்ளது. 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் பரமேஷ்வரன் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 குறியீடு செய்யபப்பட்டுள்ளது. மனுதாரரின் ஊனச்சான்று நீ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யபப்பட்டுள்ளது.

ii) மனுதாரர் தனது மனு மற்றும் சாட்சியத்திலும் கடந்த 08.01.2022 அன்று வழக்கம்போல வேலைக்கு TN 29 CY 9375 பதிவெண் கொண்ட இரு சக்கரவாகனத்தில் தனது நண்பர் சுதாகர் என்பவருடன் சென்று கொண்டிருந்தார் என்றும், மாலை 03.30 மணியளவில் ராயக்கோட்டை – கெலமங்கலம், தின்னூர் ELPS பள்ளி அருகில் சென்று கொண்டிருந்தபோது TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநர் அதிவேகமாக வந்து மனுதாரர் சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி விபத்திற்கு 1 வது எதிர்மனுதாரரும், 2 வது எதிர்மனுதாரரால் காப்பீடு செய்யப்பட்ட TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநர் அதிவோகமாகவும், அலட்சியமாகவும், சாலை விதிகளைப் பொருட்படுத்தாமலும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது.

iii) விபத்து நடந்தவுடன் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ. 1 ல் 1 வது எதிர்மனுதாரரின் TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட கார் ஓட்டுநர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

iv) கற்றறிந்த 2 வது எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் விபத்தானது 1 வது எதிர்மனுதாரரின் TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும், மனுதாரர் தான் அவர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து 1 வது எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும், 1 வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமத்தில் பேட்ஜ் இல்லை என்றும், அதனால் பாலிசி விதிமீறல் உள்ளது என்றும், மேலும், மனுதாரர் இருசக்கர வாகனத்தில் மனுதாரர்

சதிஷ் ஓட்ட பின்னால் சுதாகர் மற்றும் மற்றொரு நபரை உட்கார வைத்து 3 நபர்கள் சென்றிருப்பதால் மனுதாரர் தான் விபத்திற்கு காரணம் என்றும் வாதிடப்பட்டிருக்கிறது.

v) மனுதாரர் தரப்பில் அதனை மறுத்து விபத்தானது TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்து சமயம் TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட வாகனமானது 2ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தின் காப்பீடு செய்யப்பட்டிருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை கொடுக்கப்பட்டவர் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

vi) 1வது எதிர்மனுதாரரின் TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்று 2வது எதிர்மனுதாரர் தரப்பில் கூறினாலும், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநர் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் இருந்ததே விபத்திற்கான காரணமாக விபத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை வைத்து பார்க்கும்போதும் விபத்தானது 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரால் நடைபெறவில்லை என்பதற்கு அந்த ஓட்டுநரை 2வது எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரித்து 1வது எதிர்மனுதாரர் ஓட்டுநரால் விபத்து நடைபெறவில்லை என்று 2வது எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. ம.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையின்படியும் 2வது எதிர்மனுதாரர் தரப்பில் 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரை விசாரித்து விபத்திற்கு 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் காரணம் இல்லை என்பதை நிரூபிக்காததால் TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநர் தான் இவ்வழக்கு விபத்திற்கு காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமத்தில் பேட்ச் இல்லை என்பதால் பாலிசி விதிமீறல் உள்ளது என்று ஒரு வாதம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. 2வது எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட எ.ம.சா.1 அவரது சாட்சியத்தில் TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட வாகனம் சொந்த வாகனம் என்றும் அதற்கு பர்மிட் கிடையாது என்றும், அந்த சொந்த வாகனத்தை ஓட்டுவதற்கு பேட்ச் தேவையில்லை என்றும், அவரது சாட்சியத்திலிருந்து

தெரியவருகிறது. எனவே, TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநருக்கு பேட்ச் தேவையில்லை என்பதால் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட காரின் ஓட்டுநருக்கு பேட்ச் இல்லை என்பதால் பாலிசி விதிமீறல் உள்ளது என்ற வாதம் நிராகரிக்கப்படுகிறது.

ம.சா.1 ஐ 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படும் போது மனுதாரரே அவரது சாட்சியத்தில் நாங்கள் 3 பேர்கள் அந்த இருசக்கர வாகனத்தில் சென்றோம். அது Violation of Policy என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். பொதுவாக, இரு சக்கர வாகனத்தில் 2 நபர்கள் மட்டுமே செல்ல வேண்டும். ஆனால், மனுதாரர் விபத்தின்போது அவருக்கு பின்னால் 2 நபர்களை வைத்து இருசக்கர வாகனத்தை ஓட்டியதாக அவரே ஒத்துக்கொண்டு சாட்சியம் அளித்திருக்கிறார். மனுதாரர் இருசக்கர வாகனத்தை மனுதாரருடன் சேர்த்து 3 நபர்கள் சென்றிருப்பதாலும், அஜாக்கிரதையாக மனுதாரர் இருசசக்கர வாகனத்தை ஓட்டியிருப்பதாலும் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகையில் 10 சதவீதத்தை மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**7. பிரச்சனை 2**

i) விபத்து சமயத்தில் TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 காப்பீடு பாலிஸி நகலைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது 06.10.2021 முதல் 05.10.2022 வரை காப்பீடு பாலிஸி உள்ளது. விபத்தானது 08.01.2022 தேதியில் நடைபெற்றுள்ளது. எனவே, விபத்து சமயத்தில் காப்பீடு உள்ளது தெரியவருகிறது. எனவே விபத்து தேதியான 08.01.2022ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீடு செயலில் உள்ளது தெரியவருகிறது. ம.சா.ஆ.2 ன் படி 1ம் எதிர்மனுதாரர் வாகனமான TN 73 E 2458 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்கு விபத்து சமயத்தில் 2 வது எதிர்மனுதாரரின்

நிறுவனத்தில் காப்பீடு செய்து காப்பீடு பாலிஸி உள்ளதாலும், பாலிசி விதிமீறல் எதுவும் இல்லை என்பதால், 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்த தீர்ப்பாயம் முடிவுக்கு வருகிறது.

**8. பிரச்சனை – 3**

**i)** இந்த விபத்து சமயத்தில் மனுதாரர் A. சதிஷ், த/பெ. அன்பழகன், 20 வயது, சூப்பர்வைசர் TATA கம்பெனி, மாதம் ரூ. 25,000/– சம்பாதித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் என்றும், இந்த விபத்தின் காரணமாக முன்பு போல் மனுதாரரால் வேலை செய்ய இயலாததால் வருமான இழப்பாக ரூ.20,00,000/– ஏற்பட்டதாக கோரியுள்ளார். ஆனால், அதற்கான சம்பள பட்டியல் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இருந்தபோதிலும் மனுதாரர் அவரது குடும்பத்தை பராமரித்து வந்தவர் என்ற அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.12,000/– சம்பாதிக்க வாய்ப்புள்ளதாக கருதி மனுதாரரின் மாத வருமானம் ரூ.12,000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர் அவரது குடும்பத்தை பராமரித்து வந்தவர் என்ற அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களினால் மனுதாரர் குறைந்தபட்சம் 3 மாதங்கள் வேலை செய்யாத நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, 3 மாத வருமான இழப்பிற்கு 3 X 12,000 = ரூ.36,000/– மனுதாரருக்கு வருமான இழப்பின்கீழ் கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

ii) மனுதாரரின் ஊனம் பற்றி கணிப்பதற்காக மருத்துவக் குழு முன்பு ஆஜரானபோது 25 சதவீதம் ஊனம் எனக் குறிப்பிட்டு ஊனச்சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மருத்துவகுழுமத்தால் வழங்கப்பட்ட நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றை நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொள்கிறது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தின் அடிப்படையில் Noori Vs Narendran and New India Assurance Co. Ltd. 2025 (1) TN MAC 447 என்ற முன்தீர்ப்பின்படி 2022ம் ஆண்டில் விபத்தில் ஏற்பட்டுள்ள ஊனத்திற்கு 1 சதவீதத்திற்கு ரூ.9000/– என மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்த மனுதாரருக்கும் 2022ம் ஆண்டில் ஏற்பட்ட ஊனத்திற்கு 1 சதவீதத்திற்கு ரூ.9000/–

என எடுத்துக்கொண்டு 25 சதவீதத்திற்கு 9000 X 25 = ரூ. 2,25,000/- என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

iii) மனுதாரர் ஓசூர் நாதன் மெடிக்கல் பில்லாக ரூ.14,602/- செலவு செய்ததாக ம.சா.ஆ. 6 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். அது 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. ம.த.சா.ஆ.6 ஐ பார்வையிடுகையில் அதில் மொத்தம் மனுதாரர் செய்த செலவுத்தொகை ரூ.14,602 ஆகும். மனுதாரருக்கு மெடிக்கல் செலவாக ரூ. 14,602/- கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

iv) மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ. 3,00,000/- இழப்பிடாக கோரியுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை, இயலாமை ஆகியவற்றை கருத்தில் கொண்டு ரூ.20,000/- வலி மற்றும் வேதனைக்காக கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

v) மனுதாரர் எதிர்கால மருத்துவ செலவுக்காக ரூ.50,000/- கோரியுள்ளார். ஆனால் அவை குறித்து பார்க்கும்போது மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவாகும் என்பதை காட்ட எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆதலால், மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவாக எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கது அல்ல என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

vi) மனுதாரருக்கு உடன் இருந்தோர் செலவாக மொத்தமாக ரூ.5,000/- கோரியுள்ளார். மனுதாரர் மருத்துவமனைகளில் உள்நோயாளியாக இருந்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் மனுதாரருக்கு உடனிருந்தோர் செலவாக எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

vii) மனுதாரரின் வயது, தொழில், சிகிச்சை விவரங்கள், காயத்தின் தன்னம மற்றும் ஊனச்சான்றைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு இழப்பீடு வழங்க நீதிமன்றம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் ஊனத்திற்காக 25 X 9000 | ரூ. 2,25,000/- |
| 2. | மனுதாரரின் வருமான இழப்பிற்காக 3 x 12,000 | ரூ. 36,000/- |

| | | |
|---|---|---|
| 3. | மனுதாரரின் ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ. 10,000/– |
| 4. | மனுதாரலின் வலி மற்றும் வேதனைக்காக | ரூ. 20,000/– |
| 5. | மனுதாரரின் ஆடை அணிகலனுக்காக | ரூ. 5,000/– |
| 5. | மனுதாரரின் போக்குவரத்து செலவிற்காக | ரூ. 5,000/– |
| | **மொத்தம்** | ரூ. 3,01,000/– |
| | கழித்தல் 10 சதவீதம் | ரூ. 30,100/– |
| | மொத்தம் | ரூ. 2,70,900/– |
| | மெடிக்கல் பில்கள் | ரூ. 14,602 /– |
| | மொத்தம் | ரூ. 2,85,502/– |

viii) மனுதாரருக்கு ரூ. 2,85,502/– ( ரூபாய் இரண்டு லட்சத்து எம்பத்து ஐந்து ஆயிரத்து ஐநூற்று இரண்டு மட்டும்) ஆண்டு ஒன்றுக்கு மனுதாக்கல் செய்த தேதியான 06.07.2022 லிருந்து தொகை செலுத்தும் வரை 7.5 % வட்டியுடன் மற்றும் மனு செலவுத்தொகையும் இழப்பிடாக பெறத்தக்கவர் ஆவார். மனுதாரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகள் தவிர வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு பெற தக்கவர் அல்ல என இத்தீர்ப்பாயம் முடிவு செய்து இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,**

1. மனுதாரருக்கு இழப்பீடாக ரூ. 2,85,502/– ( ரூபாய் இரண்டு லட்சத்து எம்பத்து ஐந்து ஆயிரத்து ஐநூற்று இரண்டு மட்டும்) 2 வது எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும்,

2. மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தாக்கல் செய்த 06.07.2022 தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் ஆண்டு ஒன்றுக்கு 7.5 % வட்டி சேர்த்து விகிதாசார செலவு தொகையுடன் 2 வது எதிர்மனுதாரர் செலத்த வேண்டும் என்றும்,

3. மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்தக் காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. மேற்படி இழப்பீட்டுத் தொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2 வது எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான SBI, Denkanikottai,

Account No. 42776933113 and IFSC Code 9BIN0011058 க்கோ அல்லது மனுதாரர் வங்கி கணக்கிற்கோ E Transfer மூலம் செலுத்தி வைத்து அதுகுறித்து குறிப்பு மற்றும் பேங்க் அட்வைசுடன் கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிகருக்கும் அனுப்ப வேண்டும் என்றும்,

5. மனுதாரருக்காக வைப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அதற்குரிய வட்டித்தொகை மனுதாரரின் வங்கி கணக்கில் நேரடியாக NEFT or RTGS மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

6. வழக்கறிஞர் ஊதியம் ரூ. 8,710/- அவரது வங்கி கணக்கிற்கு E Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும் என்றும்,

7. மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்றக் கட்டணம் ரூ.2,228/- ஏற்கனவே செலுத்திய நீ.ம.க. ரூ.372.50/- போக எஞ்சியுள்ள நீ.ம.க.ரூ.1,855.50/- ஐ இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

8. 2020(4) CTC 272, Cholamandalam Ms Genl. Ins. Co. Ltd. Vs Mr. Ayyannar S என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

**<u>மனுதாரர் தரப்பு செலவுத்தொகை பட்டியல்</u>**

| | |
|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 372.50/- |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | ரூ.10/- |
| புரோசஸ் கட்டணம் | ரூ.10/- |
| தஸ்தாவேசுகளுக்கு ஸ்டாம்பு | ரூ.25/- |
| வழக்கறிஞர் கட்டணம் | ரூ. 8,710 /- |
| பாக்கி செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ. 1,855.50/- |
| தட்டச்சு கட்டணம் | ரூ. 100/- |
| மொத்தம் | ரூ. 11,083 /- |

9. 2வது எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூ. 11,083/– செலவுத்தொகையை செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02–ஆம் தேதியன்று அவையறியப் பகரப்பட்டது.

S VIJAY ALAGIRI

Sub Judge
Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.04.02 17:05:20 +0530

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| ம.சா.1 | சதிஷ் |

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை அசல் |
| ம.சா.ஆ.2 | எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசி நகல் |
| ம.சா.ஆ.3 | எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.4 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.5 | மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் |
| ம.சா.ஆ.6 | மருத்துவ பில்கள் அசல் |

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் அசல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| எ.ம.சா.1 | பரமேஷ்வரன் |

**சாட்சி சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| சா. சா.ஆ.1 | அனுமதி கடிதம் |
| சா.சா.ஆ.2 | TN 29 CY 9375 க்கு உண்டான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் உண்மை நகல் |
| சா.சா.ஆ.3 | TN 29 CY 9375 க்கு உண்டான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் உண்மை நகல் |

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.04.02 17:05:25 +0530